
www.padippakam.com

2 - 4

கன்னி (செப். 1996)

விலை : உரு. 3-00

# உழைக்கும் மக்கள் தமிழகம்



**சாதி வெறியை அழித்தொழிப்போம் !**
**தமிழக மக்களை அணிசேர்ப்போம் !!**

## மாநாடு



... காரு .க.மு.க

தமிழக அரசியல் — பண்பாட்டு விடுதலை மாத இதழ்

படிப்பகம்

www.padippakam.com



இழவு வீட்டில் இருத்தலென
இது என்ன கோலம்.
அட பைத்தியக்காரா
அழுவதை நிறுத்து.
இனி;
மீதமுள்ள காலமெல்லாம் இருளென
யார் சொன்னது?
வசந்தத்துக்கு முந்திய இலையுதிர்ப்பை
வரட்சியென்றா எண்ணினாய்?
பட்டுப்போய் மொட்டை மரமாக
நமக்கென்ன வேரறுந்து போச்சா?
இது புதிய துளிர்ப்புக்கான உதிர்வு
எரிதாங்கக் கூடியது எம் மண்.
இடிதாங்கக் கூடியது எம் மனை.

பாறை பிளந்து ஊற்றுக்கண் தேடிய
பரம்பரையல்லவா நீ?
அழிவுன்னை என்ன செய்யும்?
ஊர் திரும்பும்போது வீதியெல்லாம்
கள்ளி முளைத்திருக்கும்.
கதவின்றி வீடு ஓவென்று கிடக்கும்.
அதனாலென்ன
வியர்வைத் துளிர்ப்பில்
மீண்டும் எல்லாம் வெளிச்சமாகும்.
இப்போ ஊர் திரும்ப வேண்டுமே.
பகை துரத்துவதும் உன்பணியே.
பலம் வேண்டும்.
வரம் நல்காய்.

— மாலிகா

நன்றி 'எரிமலை'

படிப்பகம்

www.padippakam.com

16

தொடர்புக்கு : அஞ்சல் பெட்டி எண் : 2929
சென்னை – 600 004.

# மாநாடு - தமிழக மக்களுடையது...

தமிழகச் சமூகச் சூழல் எந்த அளவு சிக்கலுக்குரியதோ, அந்த அளவு சிக்கலுக்குரியது அதற்கான விடுதலை அரசியல் என்பதும்.

தமக்கான அடிமைத் தனத்திற்கான எதிரி யார் யார் என்பதை ஒவ்வொருவரும் தம் வாழ்நிலையிலிருந்து மட்டும் அளவிட்டுக் கொள்கிறார்களே தவிர, தம் வாழ் நிலையை இச்சமூகச் சூழலோடு இணைத்து வைத்து எண்ணி, இச் சமூக அடிமைத் தனத்துக்கே யார் எதிரி என்பதை வகுத்துக் கொள்வதில்லை.

தம் மீதான ஒடுக்குமுறையைத் தான் உணர்ந்தவற்றி லிருந்து மட்டும் அளவிடுவது என்பது, தாம் உணர்ந்து கொண்ட நிலையிலிருந்து யானையைத் தழுவிய குருடர்களின் நிலையை ஒத்ததே.

இச் சூழலில் தமிழகத்தைப்பற்றி அளாவிச் சிந்திக்க வேண்டிய கட்சிகள், பல நிலையில் அரசியலில் தேங்கிக் கொண்டன.

காலங்களில் - உலகில் ஆங்காங்கு நடக்கிற புரட்சியை, எழுச்சியைக் கொண்டு, இங்கு புரட்சியை வழிநடத்தத் திட்டமிட்டனர்.

இரஷ்யப் புரட்சி பாணியில்தான் இங்கு புரட்சி என்றும், சீன பாணிதான், கியூபா பாணிதான், ஈழத்துப் பாணி தான் என்று சிந்தனையாளர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு இயக்கமும் சூடு போட்டுக் கொண்டது தான் மிச்சம். தமிழகம் அசைந்து கொடுக்கவில்லை.

தமிழகத்தைத் திராவிடத்துக்குள் அடைக்க முயன்ற செயல்களும், தமிழகத்தைத் தமிழுக்குள் மட்டும் நிறுத்த முனைந்த கருத்துகளும் முழுமைப்பட முடியாமலே போய்விட்டன.

வகுப்பு (வர்க்க) எழுச்சி சாதியை ஒழித்துவிடும் என்றும், தமிழர் எழுச்சி சாதியை மறுத்துவிடும் என்றும் கூக்குரல்கள் நீண்டு ஒலிக்க முடியாமல் தளர்ச்சியுற்றுப் போயின.

ஆதிக்கச் சாதிவெறியால் அடிமையுண்ட ஒடுக்கப் பட்ட மக்கள் தாக்கப்படும் பொழுது - இது தமிழர்க் கானச் சிக்கல் இல்லை என்றும், இது ஒரு வர்க்கப் போராட்டம் இல்லை என்றும் தமிழ் அமைப்புகளும், பொதுவுடைமை அமைப்புகளும் ஒதுங்கிக் கொண்டன.

தமிழ்வழிக் கல்வி இல்லாததையோ, இந்தி ஆங்கிலத் திணிப்பையோ தனக்கானதாக சாதிவழி ஒடுக்கப்பட்ட மக்கள் எண்ண முன்வர முடியவில்லை. வகுப்புப்புரட்சி அமைப்புகள் தம்முடைய பார்ப்பனிய உணர்வு அற்றுப் போகாமல் அதை மொழி வெறி என முணகத் தொடங்கின.

வகுப்புச் சிக்கல்களாக எழுந்த போராட்டங்கள் எவரால் முன்வைக்கப்படுகிறது என்கிற அளவில் அதில் சாதிய அளவீடு மறைந்து போய்விடவில்லை.

இத்தகைய சூழல்களிலேயே தமிழகத்தில் உள்ள தமிழ் அமைப்புகளும், பொதுவுடமைக்கட்சிகளும், அம் பேத்கர் இயக்கங்களும் தங்கள் அரசியலின் போதாமை குறித்துக்கூட கவலையுறாமல் அலமறுகின்றன.

எனவே, தமிழகத்தின் கடந்த கால இத்தகைய படிப்பினைகளைக் கொண்டெழுந்திருக்கிற 'தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்' முகங்கொடுக்க வேண்டிய அரசியல் சிக்கல் இதுவாக இருக்கிறது.

அது முன்னெடுத்த இத் தமிழக மக்களின், அதாவது தமிழக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான அரசியல் 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' என்கிற அளவீட்டிலேயே நிறைவுறும் என்பதை விளக்க வேண்டிய கடமை அமைப்புக்கு இருக்கிறது.

அத்தகைய கடமையாகவே கடந்த ஆண்டு, த.ஒ.வி.இ. தமிழக அளவில் மாவட்ட மாநாடுகளையும், கருத்தரங்கு களையும் கூட்டி மாற்று அமைப்புகளின் கருத்தைக் கேட்க முனைந்தது.

அவ்வகையில் கருத்தறிவிப்பதுகூட ஏதோ 'தீண்டாத' செயல் எனப் பொதுவுடைமை முற்போக்கு அமைப்புகள் அக்கருத்தரங்குளளில் பங்கெடுக்காமல் போயின.

இருப்பினும் - அவர்களின் வெளியீடுகளின் வழியானச் செய்திகளைக் கொண்டு, அவர்களின் அரசியலைத் திறனாய்ந்தே 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' என்பது குறித்தான அரசியலை முன்வைத்திட இம்மாநாடு கூட்டப்படுகிறது.

தமிழக அரசியல் களத்தில்- இத் தமிழக மக்களுக்கான, தமிழக உழைக்கும் மக்களுக்கான, தமிழக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை அரசியலை முன்னெடுப்பதே இம் மாநாடு.

இம் மக்களுக்கான, இம் மக்களின் மாநாடு இது-

ஒடுக்கப்பட்டோரின் எழுச்சியில்லாமல் - வல்லரசியம் அழியாது

அடிமைச் சாதியர் எழுச்சியில்லாமல் - ஆளுமைச் சாதியம் ஒழியாது.

- என்கிற வகையில்

செப். 7, 8 - இல் வள்ளியூர் மாநாட்டில் வந்திணைவோம்!



படிப்பகம்

www.padippakam.com

# தி.மு.க. அரசு . . .

## . . . ஒரு பார்வை

திராவிட முன்னேற்றக் கழகம் நான்காம் முறையாகத் தமிழக அரசின் அமைச்சகப் பொறுப்பேற்று மூன்று மாதங்கள் முடியப் போகிறது.

ஜெயலலிதா அரசின் கொடுநெறிப் போக்கும், ஆடம்பர அரசியலுமே ஜெயலலிதாவை வீழ்த்தியது.

ஓர் அரசு எந்த அளவு கொடுநெறி அரசாக இருக்க முடியும் என்பதற்கு ஜெயலலிதாவின் அரசாங்கம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது.

மறைந்த எம்.ஜி.ஆரின் திரைப்படப் போதையை எண்ணி, அவர் வழியிலேயே ஜெயலலிதாவை ஏற்றுக் கொண்ட மக்களே -அவரைத் தூக்கி எறிந்தனர்.

ஆனால்-அதற்கு மாற்றாக, இதையெல்லாம் சரிசெய்ய தி.மு.க.வால்தான் முடியும் என்கிற நோக்கத்தினால் தி.மு.க.வை அவர்கள் தேர்ந் தெடுத்துவிடவில்லை.

தி.மு.க. ஒன்றும் தமிழகத்திற்கு ஒரு புதிய அரசு அல்ல. அது ஏற்கனவே மூன்று முறை ஆட்சி செய்திருக்கிறது.

அது, தம் இன்றைய ஆட்சிக் காலத்தில் மாற்ற எண்ணுகிற சில நடைமுறைகள் அனைத்தும், அது தொடக்கத்தில் அரசியல் களத்தில் நுழைந்தபோது பேசிய பேச்சுகளின் பகுதிச் செய்தியே ஆகும்.

'அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு'- என்ற வீரப் பேச்சுகளின் தொடர்ச்சி இன்று- 'மகாத்மா காந்தியின் உன்னதமான நடைமுறை'யை ஏற்கச் சொல்லி வந்து நிற்கிறது.

கடந்த கால தி.மு.க. ஆட்சிகள் என்பவை ஊழலற்ற, சுரண்டலற்ற, ஏழை-பணக்காரன், மேல்சாதி, கீழ்சாதி என்ற வேறுபாட்டை ஒழிக்கிற முயற்சி கொண்டவையாக இல்லை.

அடிப்படை மக்களை இன்று நசுக்குவதாக எண்ணப்படுகிற பரிசுச்சீட்டுகளும், சாராயக் கடை வரவுகளும் அன்றைய தி.மு.க. அரசின் கால வரவுகளே.

ஆங்கில நர்சரி பள்ளிகள் அன்றைய விதைகளாகவே இருக்கின்றன. மேடையில் அழகொழுகப் பேசுகிற அன்றைய தி.மு.க. ஆட்சியாளர்களின் குழந்தைகள் அனைத்தும் 'ஆங்கிலக் கான்வெண் டில்' படித்து வளரவே செய்தனர்.

திராவிடநாடு இல்லாவிட்டால் சுடுகாட்டைத் தேடுவதாக முழக்கமிட்டவர்கள் இந்திய ஆளும் பார்ப்பன ஆட்சிக்குப் பாடை விரிக்காமல் "நேருவின் மகளை வரவேற்று நிலையான ஆட்சியைக் கேட்டுப் பட்டுக்கம்பளமிட்டு வரவேற்றனர்.

இத்தகைய பழைய நடைமுறை ஆட்சியின் தொடர்ச்சியாகத்தான் எம்.ஜி.ஆரும், ஜெயலலி தாவும் தங்களின் கொட்டத்தை நடத்தினர்.

தமிழகத்தைக் குண்டர்களின் நாடாக மாற்றியதன் பெருமை (!) ஏழைகளின் தலைவர் எனக் கருதப்பட்ட எம்.ஜி.ஆரையே சாரும்.

ரவுடிகளும், போலீசும் தலைவிரித்தாடினர். தேவாரம் தன் மீசையை முறுக்கி ஏழை மக்களைச் சுட்டுத்தள்ளிய நிகழ்ச்சியின் பட்டியல் ஒரு புத்தகமாக எழுதப்படுகிற அளவிற்கு எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் போலீசைக் கையில் வைத்துக் கொண்டு கொட்டமடித்தனர்.

தெருவுக்குத் தெரு கொலைகள் விழுந்தன. உரிமை கோருவோர் ஒடுக்கப்பட்டனர். ஒடுக்கப் பட்டோர் நசுக்கப்பட்டனர். காவல் நிலையங்கள் கற்பழிப்புக் கூடாரங்களாயின. தமிழ் அறிஞர்கள் துன்புறுத்தப்பட்டனர், சிறையிலடைக்கப்பட்டனர்.

இத்தகைய சூழலை ஏற்கமுடியாமல்தான் வேறு வழியில்லாமல் தி.மு.க.வை மீண்டும் ஆட்சியில் ஏற்றியுள்ளனர் தமிழக மக்கள்.

ஆட்சிக்கு வந்த வேகத்தில்

'அழுகிய ஈரலாகப் போலீசு துறைஉள்ளது' என்றும், தம்மால் முடிகிற அனைத்து நிலை களையும் சரிசெய்வதாகவும் குறிப்பிட்டார் தி.மு.க.தலைவர்.

மந்தமாகவே செய்வதனாலும் 'மெட்ராசை' - சென்னை என மாற்றியதும், தமிழ் வழிக் கல்வியைக் கொண்டுவர முயற்சிப்பதும், தமிழில் படித்தோர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க இசைவதும்- தமிழக மக்களுக்கான நீண்ட காலத்திட்ட நல்ல முயற்சிகளாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், இவையாவும் எந்த அளவில் பயனாகும் என்பதையும் இதற்குமுன் செய்யப்பெறவேண்டிய சில முகாமைத் திட்டங்கள் குறித்தும் நாம் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

எனவே, தி.மு.க. அரசின் இன்றைய அணுகுமுறை எப்படியாக இருக்கிறது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

**போலீசு துறையை என்ன செய்யப் போகிறது.?**

ஜெயலலிதாவின் ஆட்சியில் கெட்டுப் போனதாகக் கூறப்படும் போலீசு துறை- தி.மு.க. அரசால் சரிசெய்யப்படுமா?

- போலீசுகாரர்கள் கற்பழிப்பு நிகழ்ச்சியில் இறங்கப்போவதில்லையா?
- போலீசார் லஞ்சம் வாங்கப் போவதில்லை?
- மக்களைக் கொள்ளையடிக்கிற பணக்காரர் களைச் சிறையிலடைத்து விடுவார்களா?
- ரவுடிகளை வளர்த்துக் கொலை செய்கிற அரசியல்காரர்களை அடக்கிவிடப் போகிறார் களா?
- சாராயம் காய்ச்சத் தூண்டப்படுவதும்- அதற்கு 'மாமுல்' பெறுவதும் நின்றுவிடப் போகிறதா?

மக்களைத் துப்பாக்கியால் சுட்டுத்தள்ளுகிற கொடுவெறி அடங்கிவிடப் போகிறதா?

அதிகாரங்கள் அனைத்தும் போலீசுக்கே சொந்தம் என இயங்குகிற போக்கை தி.மு.க.அரசு எப்படி மாற்றப் போகிறது என்பதில் கவலை கொள்ளவில்லை.

ஆயுதங்களைக் கொண்டு மக்களை அடக்க நினைப்பது மீண்டும் மீண்டும் வன்முறையைத் தூண்டும் என்கிற அடிப்படை உண்மை தி.மு.க. அரசுக்குப் புரியாதா என்ன?

ஆட்சிக்குவந்த மூன்று மாதத்திற்குள்ளாகவே மூன்று துப்பாக்கிச் சூடுகளையல்லவா நடத்தியிருக்கிறது தி.மு.க. ஆட்சி.

திண்டுக்கல் சவேரியர்பாளையத்தில் துப்பாக்கிச் சூட்டால் தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறாரே அதற்கு தி.மு.க. அரசு வெட்கப்படவில்லையா?

ஈரல் அ.தி.மு.க. அரசில்மட்டும்தான் கெட்டுப் போயுள்ளதா?

**தமிழ்வழிக் கல்வியோடு செய்யப் பெற வேண்டுவது எது?**

நாற்பதாண்டு கால 'மிசோரம்' விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர அன்றைய ராவ் ஆட்சி ஓர் ஒப்பந்தம் போட்டது. அதை இங்கு இணைத்து எண்ணிப் பார்ப்பது, தமிழ்நாட்டுத் தமிழ்வழிக் கல்வியைச் சரியான கோணத்தில் புரிந்து கொள்ள துணை செய்யும்.

அந்த ஒப்பந்தத்தின்படி'மிசோரம்' இந்திய வரைபடத்தில் இருந்தாலும், இந்திய நாணயத்தைப் பயன்படுத்தினாலும் போதும் என்கிற அளவில் ஏற்கப்பட்டது. அதன் வழி மிசோரம் ஒரு தனித்த அரசாகவே செயலாற்ற எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டன.

ஆனால் குறைந்த காலத்திலேயே அங்கு தேர்தல் நடத்தி, அதில் தனது தில்லு முல்லு வேலைகளோடு காங்கிரசு வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற கையோடு கொடுக்கப்பட்ட உரிமைகள் ஒவ்வொன்றாகப் பிடுங்கப்பட்டு, இன்று மிசோரம் ஓர் அடிமை மாநிலமாய் இருக்கிறது.

அது போலவே - இன்றைய தமிழ்நாட்டின் உரிமைகள் முழுமையாய்த் தமிழக மக்களுக்கு இல்லை.

தமிழகப் பெட்ரோல் இந்தியாவுக்குச் சொந்தமாகிவிட்டது.

அசாம் பெட்ரோல் 85 விழுக்காடு அசாமுக்குச் சொந்தம். ஆனால் தமிழ்நாட்டுக் கன்னெய் (பெட்ரோல்) மட்டும் ஒரு விழுக்காடுகூட தமிழ்நாட்டுக்குச் சொந்தமில்லை.

இப்படித் தமிழகம் இழந்துள்ள உரிமைகளும், உடைமைகளும் கொஞ்சநஞ்சமல்ல.

இவையாவும் தி.மு.க.வுக்குத் தெரியாததும் அல்ல.

மேலும், வெளிநாட்டுக் கூட்டு என்கிற பெயரில் -இங்குள்ள எல்லா பெரியபெரிய தொழிலகங்களும் வெளிநாட்டுக்கரர்களுக்கே சொந்தமாகி விட்டன.

ஏழைத் தமிழக மக்களின் உழைப்பும், உற்பத்தியும் வெளிநாட்டுக்காரர்களால் கொள்ளை யடிக்கப்படுகின்றன.

சிறிய குண்டூசியிலிருந்து பெரிய பொருள்கள் வரை அனைத்தும் வெளிநாட்டினரையே கொழுக்க வைக்கின்றன.

இந்த அளவில் தமிழகத் தொழில்வளமும் தமிழகத்துக்கு இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

பேர்ஹென்சும், கால்கெட்டும், ஹமாமும், ரெக்ஸோனாவும், லக்சும் எல்லாம் வெளிநாட்டாருடையவை.

வின்சென்ட், காலிமார்க் சோடாவெல்லாம் உடைக்கப்பட்டு இன்று பெப்சியும், கோல்டு ஸ்பாட்டும் என்று கும்மாளிக்கின்றன.

புதியதாய்த் தொடங்கப்பட்ட டுபாண்ட் என்கிற நைலான் இழை ஆலை, தூத்துக்குடி தாமிர ஆலை, பொள்ளாச்சி மாட்டுக்கறி பதப்படுத்த ஆலை-இப்படி அனைத்தும் வெளிநாட்டாரைக் கொழுக்கவைக்கவே தொடங்கப்படுகின்றன.

இந்த நிலையில் தமிழில் பெயர்ப்பலகை என்பதும், தமிழ் வழிக் கல்வி என்பதும் முக்கியமானதுதான் -ஆனால் அவற்றோடேயே செய்யப்படவேண்டிய வேலை எது?

தமிழகத்தின் மீதும், தமிழக மக்களின் மீதும் அக்கறை இருக்குமானால்-

தமிழக உரிமைகளுக்கும், உடைமைகளுக்கும் குரல் கொடுக்கவும்,

வெளிநாட்டுக் கூட்டு நிறுவனங்களை விரட்டி அடிக்கவும் அல்லவா தி.மு.க ஆட்சி முன்வரவேண்டும்.

பெயர்ப்பலகையைத் தமிழ்ப்படுத்தச் சொல்லுகிற அதேபோது அமெரிக்கர்களின் கண்ணாடி ஆலையை சென்னைக்கு அருகில் திறந்து வைக்கிற நடைமுறை எந்த அளவு மோசடியானது.

நிலத்தையும், நிலத்தின் கனிவளங்களையும், உழைப்பையும், உழைப்பின் ஈட்டத்தையும், வெளிநாட்டார்க்கு விற்றுவிட்டு எதைத் தமிழ்ப்படுத்தி என்ன ஆகப் போகிறது.

இப்படித் தமிழ்ப்படுத்துவதை மட்டும் மேற்கொள்ளுகிற முயற்சி தமிழ் அமைப்புகளின் வாயை அடைக்க அல்லவா தி.மு.கவுக்குத் துணைசெய்கிறது.

தி.மு.க. அரசுதான் தமிழருக்கான அனைத்து முயற்சிகளையும் செய்வதாக நிறைவடைந்து போகின்றன தமிழ் அமைப்புகளும்.

அதோடு மட்டும் அல்லாமல் சாதிய உணர்வுகள் வெறியாய்த் தூண்டப்பட்ட கடந்த ஆட்சியின் தொடர்ச்சியாகவே தி.மு.கவும் செயல்படுகிறது.

ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களில் சாதி அடிப்படையில் மாவட்டப் பெயர் வைப்புப் பணியைத் தொடரத் தொடங்கியது.

சாதிக்கலவரங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக உள்ள முரண்பாடுகளைக் களைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

தி.மு.க.வின் கடந்த கால ஆட்சியிலும்கூட சாதிக் கலவரங்கள் கொடுமையாக நடந்தன.

கீழ்வெண்மணியின் படுகொலைகளை நடந்து விட்ட தீய கனவாக மறக்கச் சொன்ன அண்ணாத் துரையின் தீச்சுவடு இன்னும் மறையவில்லை.

அதே பாணியில்தான் விழுப்புரம், ஊஞ்சனை, போடிநாயக்கனூர் என தி.மு.க.கால சாதிக் கலவரங்கள் நடந்தன.

ஆனால் அதைத் தொடர்ந்து அ.தி.மு.க காலங்களில் ஆதிக்கச் சாதியர் வெறி கொண்ட போராகவே நடத்தத் தொடங்கிவிட்டனர்.

போலீசாரும், அரசும் முழுவதும் ஆதிக்கச் சாதியர்க்கே துணை நிற்கலாயினர்.

இதையெல்லாம் - சட்டப் பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் வைப்பதின் மூலம் சரி செய்து விட முடியாது.

ஆதிக்கச் சாதி வெறித்தனத்தை வீழ்த்தாமல் - இங்கு சாதிய வெறியாட்டங்கள் அடங்கப் போவதில்லை.

எனவே இதுபோன்ற அனைத்து நிலைகளிலும் தி.மு.க.அரசு கவனம் செலுத்தாமல் போகுமானால் அதுவும் மக்களிடையே நம்பிக்கை இழந்து போகும்.

அனைத்து அரசுப்பணியாளர்கள் போன்றதான அதிகாரம் தவிர வேறு உயர் அதிகாரம் ஏதும் இல்லாத அளவில் போலீசுதுறை கட்டுப்படுத்தப்படாமல் போகுமானாலும், வெளிநாட்டுக் கூட்டு முற்றிலும் தடுக்கப்பட்ட தமிழக அளவிலான பொருளியலை வளர்க்காமல் போனாலும், ஆதிக்கச் சாதிவெறியை வெட்டி வீழ்த்துவதற்கான முயற்சியைச் செய்யாமல் போனாலும்,

தி.மு.க.அரசு இன்றைக்கு அ.தி.மு.க.அரசு தூக்கி எறியப்பட்ட அதே நிலையில் மக்களிடமிருந்து தூக்கி எறியப்பட்டு விடும் எனக் கூறிக் கொள்ளுகிறோம்.

இன்றைய இந்தப் போலி சனநாயகத் தேர்தல் முறை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏதும் செய்து விடாது. மக்களுக்கே உரிமைகள் அனைத்தும் மாறுகிற ஒரு மக்கள் சனநாயக முறையிலேயே மாற்றம் இருக்க முடியும் என்றாலும், இந்தச் சூழலில் தி.மு.க.அரசு மேற்சொன்னவற்றைக் கருத்தில் கொண்டாவது இதைச் செய்ய முயற்சி எடுத்திடல் வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்நாட்டில் மாட்டிறைச்சித் தொழிலகமா?



பசு- ஒரு புனிதமான விலங்கு. அதைக் கொல்லக்கூடாது என்று கூச்சலிடுகின்றன குடுமிக்கூட்டங்கள். பொழில்வாய்ச்சி என்ற பொள்ளாச்சியில் அரசு, வெளிநாட்டுத் துணையுடன் மாட்டிறைச்சிப் பதப்படுத்தும் தொழிலகம் அமைக்கிறது. அதை எதிர்த்தே இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் ஆர்ப்பரிக்கின்றன.

மாட்டிறைச்சிப் பதப்படுத்தும் தொழிலகத்தால்

- சுற்றுச்சூழல் பாதிப்படைவது,
- இந்து மத வழிப்பாட்டாளர்களைத் துன்புறுத்துவது, என்கின்ற காரணம் காட்டி இந்த இயக்கங்கள்.

இது பற்றி பெரியார் மாவட்டத்தில் இயங்கிவரும் ஆதித்தமிழர் பேரவை அமைப்பாளர் தோழர் அதியமான் அவர்களைக் கேட்டபோது

*"சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவது- இதனால் மட்டுமே அல்ல; மாட்டிறைச்சித் தொழிலிலோ- தோல் பதனிடும் தொழிலிலோ பணிபுரிவது பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோரும்; இசுலாமிய மதம் சார்ந்தோர் மட்டுமேதாம்.*

*இன்றைக்கு இந்த தொழிலில் மட்டும் அல்லாமல் கூடங்குளம், கல்பாக்கம் அணுமின் நிலையங்கள், நைலான் இழை ஆலை, தாமிர பிரிப் பாலை, சாயம் தோய்ப்புத் தொழில்கள் வழியெல்லாம் சுற்றுச்சூழல் பாதிக்கப்படவில்லையா?*

*மேலும், அந்தத் தொழில்களில் அனைத்துச் சாதியினரும் இன்னும் சொன்னால் ஆளுமைச் சாதியரெல்லாம் ஈடுபடுகின்றனர். எனவே அதன் வழியான சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றி இந்து முன்னணியோ, ஆர்.எஸ்.ஸோ கவலை கொள்வதில்லை. பிற இயக்கங்களும் அவற்றை எதிர்க்க முன் வருவதில்லை என்று கூறினார்.*

நாள்தோறும் ஆயிரக்கணக்கான அடிமாடுகள் கேரளாவிற்கு ஓட்டிச் செல்லப்படுகின்றன.

அதன் வழி மாட்டிறைச்சி பதப்படுத்தப்பட்டு வெளி நாடுகளுக்கு அனுப்பப் பெறுகிறது. தோல் தொழிலும் பெருமளவில் பெருகுகிறது.

எனவே, இந்த உழைப்பையும், ஊதியத்தையும் தமிழக மக்கள் இழக்க வேண்டியுள்ளது.

இதைச் சரிசெய்கிற நோக்கில் பொள்ளாச்சி மாட்டிறைச்சி பதப்படுத்தத் தொழிலை நாம் வரவேற்கலாம்.

ஆனால் அதே போது -

அதன் கழிவு நிலத்தைப் பாழடிக்காமல், அதனையும் பயன்படுத்துகிற வகையில்திட்டமிடலாம்,

அதில் வெளிநாட்டுக் கூட்டு இருக்குமானால் அதை எதிர்த்து, தமிழ்த் தேசிய சிறு முதலாளிகளை ஊக்கப்படுத்துகிற வகையில் அவர்களின் பொறுப்பின்கீழ் கொண்டுவரலாம்.

மேலும், உணவுப் பொருள்கள் எதுவும் தமிழக மக்களின் தேவைக்குப் பிறகே ஏற்றுமதி செய்யப் பெறவேண்டும். அதுவும் தமிழக விற்பனை விலைக்குக் குறைவாக ஏற்றுமதி செய்யக் கூடாது - என்கிற பொது நிலையை மேற்கொள்ள வேண்டும்.

சாதிவெறியை அழித்தொழிப்போம்!
தமிழக மக்களை அணி சேர்ப்போம்!
மாநாடு
செப். 7, 8 - '96 வள்ளியூர் (நெல்லை மாவட்டம்)



படிப்பகம்

www.padippakam.com

# 'பெரியார் திராவிடர் கழகம்'



## விடுதலை இராசேந்திரன் அவர்களுடன் நேருரை

'பெரியார் திராவிடர் கழகம்'

- சென்னையில் கடந்த 20-7-96 அன்று தொடங்கப்பெற்றது.

*"பார்ப்பனர்களை நம்மைப் பொறுத்த அளவிற்கு நாம் அமைப்புகளில் சேர்ப்பதில்லை. அவ்வாறு பார்ப்பனர்களை சேர்த்துக் கொண்டு அவர்கள் தலைமையில் இருக்கிற கட்சிகளை நாம் ஆதரிப்பதில்லை. நரசிம்மராவை நாம் ஆதரிக்கவில்லை. ஹெக்டேயை நாம் ஆதரிக்கவில்ல. அதே வரையரைதானே இங்கே தமிழகத்திற்கும் இருக்க வேண்டும். ஜெயலலிதாவை மட்டும் ஏன் வீரமணி ஆதரித்தார்? எந்த விதத்தில் அது சரி?"*

என்று நிகழ்ச்சியில் கேள்வி எழுப்பினார் ஆனூர் ஜெகதீசன் அவர்கள்.

பெரும்பாலும் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்து பெரியார் திராவிடர் கழகத் தொடக்க நிகழ்ச்சியில் பேசியவர்கள் எல்லாம் இந்த அடிப்படையி லேயே பேசினர்.

ஜெயலலிதா உடனான வீரமணியின் தொடர்பும், ஜெயலலிதாவை சமூக நீதி காத்த வீராங்கனை என்று வீரமணி அழைத்ததும் பெரிய அளவில் திறனாயப்பட்டது. பெரியார் நூல்கள் வெளியிடப்படாமல் முடக்கப்பட்டதாகவும் பெரியார் கல்வி நிறுவனங்களிலே பெரியார் தொண்டர்களிடையே நன்கொடை என்கிற பெயரில் தொகை பறிப்பதாகவும் ஈழத்தமிழர்க்கு ஆதரவாகத் திரட்டப்பட்ட ஒரு கோடி கையொப்பங்கள் உலக ஒன்றியத்துக்கு அளிக்கப்படாமல் ஒரு கோடியில் கிடப்பதாகவும் திறனாய்வுகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், ஜெயலலிதாவுடனான வீரமணியின் அரசியல் உறவு ஐந்தாண்டுகளாய்த் தொடர்ந்த போதும் -தாங்கள் ஏன் 'அப்போதே வெளிவர வில்லை என்பது தொடர்பாகவோ, அதை மறுத்து கட்சிக்குள் எந்த அளவில் போராடினார் என்பது தொடர்பாகவோ யாரும் குறிப்பிடவில்லை.

"திராவிடர் கழகப் பொதுச் செயலர் வீரமணி தலைமையிலிருந்து விலகியது ஏன்?" என்று ஒரு சிறுநூல் அந் நிகழ்ச்சியில் வெளியிடப்பெற்றது. ஆனால் அந்த நூலில் திரு. வீரமணி அவர்களுக்கு பெரியார் தி.க. தோழர் பாலகுரு எழுதிய மடல்கள் அனைத்தும் 6-4-96 அன்றிலிருந்தே தொடங்குவதாகப் பதியப்பெற்றுள்ளது.

6-4-96 என்பது ஜெயலலிதாவின் ஆட்சியின் இறுதியில் மறுதேர்தலுக்கான நாள் அறிவிக்கப் பட்டதற்கு பின் உள்ள நாளே ஆகும்.

ஆக அதற்கு முன்னதாக அந்த ஐந்தாண்டு களிலும் வீரமணியின் தலைமையை மறுத்து என்ன செய்தனர் என்பது குறித்து யாரும் பேசவும் இல்லை; நூலுள் பதியவும் இல்லை.

பெரியாருக்குப்பின் வீரமணியின் தலைமை. பெரியாரியலை முறையாய்க் கொண்டு செல்ல வில்லை என்று பல்வேறு கோணங்களில் முரண் பட்டவர்கள் பலர்.

திருவாரூர் தங்கராசு, வே. ஆனைமுத்து, மயிலாடுதுறை இராமதாசு, கோவை.கு. இராம் கிருட்டிணன் ஆகியோர் முன்பே வெளியே வந்துவிட்டவர்கள்.

வெளியே வந்தவர்களில் ஆனைமுத்து அவர்கள் தொடக்கத்தில் பெரியார் சமவுரிமைக் கழகம் அமைத்து இயங்கியதோ, மயிலாடுதுறை இராமதாசு தமிழ் இன விடுதலைக் கழகம் அமைத்து இயங்கியதோ, கோவை. கு. இராமகிருட்டிணன் திராவிடர் கழகம் என்கிற அதே பெயரில் இயங்கியதோ இன்று புதியதாய் வெளியே வந்தவர்களால் அன்று எந்த வகையிலும் ஆய்வு செய்யப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அன்றுமட்டும் அல்ல - 20-7-96, இல் நடந்த பெரியார் திராவிடர் கழகத் தொடக்க விழாவில்கூட மேற்சொன்ன தி.க.விலிருந்து வெளிவந்த எவரின் விலகல் குறித்தும், அல்லது அவர்களைப் பற்றியும் யாரும் பேசிவிடவில்லை.

மேலும் அன்றைய நிகழ்ச்சிக்கு வந்திருந்த கோவை. கு. இராமகிருட்டிணன் பொதுவானப் பார்வையாளராகவே இருந்தார்.

இருப்பினும் பெரியார் திராவிடர் கழகத்தினர் கொள்கை அளவிலும் நடைமுறையளவிலும் இன்றைய திராவிடர் கழகத்தை மறுத்து வந்தது வரவேற்கக்கூடியது.

ஆனாலும் பெரியார் திராவிடர் கழகத்தினர் அரசியலுக்காக தி.க.வின் உள்ளிருந்தே ஒரு பெரும் போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டிய கடமையைச் செய்ததாகத் தெரியவில்லை.

ஜெயலலிதாவின் உறவை நியாயப்படுத்தியே ஐந்தாண்டு காலம் 'விடுதலை' இதழை நடத்தி வந்திருக்கிறார் இராசேந்திரன் அவர்கள்.

அமைதியுற்று இருந்திருக்கின்றனர் பாலகுரு அவர்களும், ஆனூர் ஜெகதீசன் அவர்களும், பிறரும்.

அந்த ஐந்தாண்டுகளில், தான் ஒப்புக் கொள்ளுகிற அரசியலுக்கு மாறான நடைமுறை யோடு ஒத்துப்போனதும், அமைதியாய் இருந்ததும் எவ்வகையில் பெரியாரியலுக்குச் சரியானதாய் அமையும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இருப்பினும் -

'பெரியார் திராவிடர் கழகம்' பார்ப்பனர்களை முழுமையாய் எதிர்ப்பதன் வழி உறுதியாய்ச் செயலாற்றும் என்றும் - அதன் வழி வரும் பிள்ளையார் ஊர்வலத்துக்கு எதிராய்ப் பெரியார் சிலை ஊர்வலத்தை அதே நாளில் நடத்துவது என்று அறிவிப்பதும் அதன் எழுச்சியைக் காட்டுகிறது.

எதிரிக்கு எவ்வகையிலும் பணியாத அரசியல் உறுதியோடு இயக்கம் தொடருமானால் வரவேற்போம்.

## விடுதலை இராசேந்திரன் அவர்களுடன்... ...நேருரை

**'பெரியார் திராவிடர் கழகம் - தோன்ற முனைப்போடு ஈடுபட்டவர்களில் விடுதலை இராசேந்திரன் அவர்கள் முகாமையானவர் ஆவார். அவர் திராவிடர் கழகத்திலிருந்து விலகிய பின்னர் அவர் தி.க. வில் எந்தப் பொறுப்பிலும் இல்லை என்று கட்டுச் சோற்றில் பூசணிக்காயை மறைக்கப் பார்த்தது தி.க. தலைமை. அது உண்மைதானா என்றும், அவர் என்ன கொள்கையின் அடிப்படையில் வெளியே வந்தார் என்றும் அறிய அவரிடம் கண்ட நேருரை :**

**பெரியாரின் கொள்கையை திரு.கி.வீரமணி கைவிட்டார் என்பதை எப்போது உணர்ந்து கொண்டீர்கள்?**

*பெரியார் கொள்கையை மக்களிடையே கொண்டு செல்வதற்கு, திராவிடர் கழகம் என்ற அமைப்பைத் தவிர வேறு அமைப்பு இல்லை என்பதால், இந்த இயக்கத்தில் பணியாற்றினேன். நான் 'விடுதலை' பத்திரிக்கையிலும் பணியாற்றியதால், பெரியார் கருத்துகளைப் பரப்ப, அது சிறந்த தளமாக எனக்கும் பயன்பட்டது. படிப்படியாக, பெரியார் கொள்கைப் பிரச்சாரம் குறைந்து வந்தாலும், பார்ப்பன எதிர்ப்பு என்ற பெரியாரின் உயிர் மூச்சு லட்சியத்தை திராவிடர் கழக மத்தியக்குழு தீர்மானத்தின் வாயிலாக (1996 தேர்தலில் பார்ப்பனர் தலைமையில் உள்ள அ.இ.அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரலாம் என்று) அதிகாரபூர்வமாக பிரகடனப்படுத்தியபிறகு இதற்குமேல் இந்த அமைப்பில் இருப்பது பயனில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.*

**அப்போதிருந்து தங்களின் சீர்செய் செயல்பாடுகள் ஏதுமுண்டா?**

*பெரியாரியலுக்கு எதிரான கருத்தியல்கள் புதிய உருமாற்றங்களில் வந்த போது அதை அம்பலப்படுத்துவதற்கு 'விடுதலை'யைப் பயன்படுத்தினேன். எடுத்துக்காட்டாக "பெரியாரைக் கொச்சைப் படுத்தும் குழப்பவாதிகள்" என்ற குணாவுக்கு மறுப்புத் தொடரைக் குறிப்பிடலாம்.*

*அந்தத் தொடர் வெளிவருவதைத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி விரும்பவில்லை. பாதித் தொடர் வந்த நிலையிலேயே*



படிப்பகம்

www.padippakam.com

அதை முடித்து விடுமாறு கூறிவிட்டார். அதை நூலாக வெளியிடவேண்டும் என்று ஏராளமான தோழர்கள் வற்புறுத்தியும் ஓராண்டுக்குப் பிறகுதான் அதை வெளியிட்டார்கள்.

அந்த நூலில் எடுத்துக்காட்டப்பட்ட தந்தை பெரியாரின் போராட்டம் மற்றும் அணுகுமுறைகள் இன்றைய தி.க. தலைமைக்கு உறுத்தலாகிவிட்டதே அதற்குக் காரணம்.

**பெரியார் கொள்கைகள் எனத் தாங்கள் எவற்றை வரையறுக்கிறீர்கள்?**

சமூக விடுதலைக்கும் வாழ்வியலுக்கும் பெரியார் தெளிவான கொள்கைகளை விட்டுச் சென்றிருக்கிறார். அதில் நான் வரையறுப்பதற்கு என்ன இருக்கிறது? ஒடுக்கப்பட்ட மக்கள் சுயமரியாதையும், சம உரிமையும் பெறவேண்டும் என்பதே பெரியாரின் இறுதி இலக்கு. அதை அடைவதற்குப் பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு,

சாதி எதிர்ப்பு,

பெண்ணுரிமை,

பகுத்தறிவு - என்பன பெரியார் கொள்கைகள்.

**தாங்கள் திராவிடர் கழகத்தில் இருந்த பொறுப்புகள் எவை எவை?**

தொடக்கத்தில் பகுத்தறிவு எழுத்தாளர் மன்ற மாநிலப் பொதுச் செயலாளர் (இப்போது இல்லை)

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிர்வாகக் குழு உறுப்பினர்,

தலைமைக் கழகம் அறிவித்த பிரச்சாரக் கலைக் குழுவில் உறுப்பினர்,

தமிழகம் முழுவதும் திராவிடர் கழகம் நடத்தும் பயிற்சி வகுப்புகளை நடத்துவது; மாநாடு கருத்தரங்குகளில் உரையாற்றுவது; பிரச்சார நாடகங்களை உருவாக்கி இயக்குவது.

**திராவிடர் கழகத்தில் திரு.கி.வீரமணியின் போக்கை மறுத்து, வெளியேறி இயக்கங் கண்டுள்ளவர்களின் நிலை குறித்துத் தங்களின் தற்போதைய கருத்து என்ன?**

அவரவர் சக்திக்கு ஏற்ப பெரியார் கொள்கைக்கு பங்காற்றி வருகின்றனர்.

**திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி வந்துள்ள தங்களின் எதிர்கால இயக்கமும் செயல்பாடும் எப்படி இருக்கும் என முன் நோக்காகக் கூற முடியுமா?**

அழிந்து கொண்டிருக்கும் பெரியார் லட்சியத்தைக் காப்பாற்றவும், பெரியார் காலத்துக்குப் பிறகு, புதிய வடிவங்களில் உருவெடுத்துள்ள ஆதிக்கச் சக்திகளை அடையாளம் கண்டு, அவர்களை அம்பலப்படுத்தவும் பெரியார் வலியுறுத்திய பண்பாட்டுப் புரட்சிகளை வாழ்வியல் போக்காய் மாற்றி அமைப்பதிலும் எங்கள் பெரியார் திராவிடர் கழகம் இயக்கம் முனைப்புடன் செயல்படும்.

**இன்றைய தமிழகச் சூழலில் பெரியாரியம் தமிழர்களின் அணி திரட்சிக்கு முரணாக இருப்பதாகக் கூறப்படுகிறதே அது குறித்து தாங்கள் கருத்து ....**

பெரியாரியம் தமிழர்களின் திரட்சிக்கு எந்த வகையில் முரணாக இருக்கிறது என்பதை தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**பெரியாரின் தமிழர் நலக்கூறுகள் என எவற்றைத் தாங்கள் கூறுகிறீர்கள்?**

பெரியாரியல் என்று எதைத் தாங்கள் கருதுகிறீர்கள்? பெரியாரியல் தமிழரின் நலனுக்கு எதிரானக் கூறுகள் கூட இருக்கிறதா? தமிழர் நலனுக்காகவே தன் வாழ்நாள் இறுதிவரை உழைத்த தலைவர் அல்லவா அவர்!

**தாழ்த்தப்பட்டோர் விடுதலை என்கிற அரசியல் குறித்துத் தங்களின் நிலையையும் பெரியாரியல் கொண்டுள்ள கருத்தியலையும் கூற முடியுமா?**

'பறையருக்கு விடுதலையில்லாமல் சூத்திரருக்கு விடுதலை இல்லை, என்று தந்தை பெரியார் சொன்ன கருத்தே எங்களது கருத்து ஆகும்.

**பெரியாரின் சுதந்திரத் தமிழ்நாடு கருத்தியல் பற்றி...**

விடுதலை என்பது மக்களுக்கான விடுதலையாக இருக்க வேண்டுமே தவிர, மண்ணுக்கான விடுதலையாக மட்டுமே இருந்துவிடக்கூடாது என்பது பெரியாரின் கருத்து. மக்கள் விடுதலைக்கு பார்ப்பனிய, சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பெரியார் போராடினார். 'சுதந்திரத் தமிழ்நாடு' கோரிக்கையும் மேற் குறிப்பிட்ட லட்சியங்களைப் பேணிப்பாதுகாப்பதற்குத்தான். ஆனால் தற்போதைய சூழலில் பார்ப்பனியம் ஏகாதிபத்தியமாக மாறி, ஏகாதிபத்திய சக்திகளுடன் கை கோர்த்துக் கொண்டு, வளரும் நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள், உலக வங்கிகள் போன்ற அமைப்புகள் மூலமாக தங்களது மறைமுக ஊடுருவலை நடத்திக் கொண்டிருப்பதினால், பார்ப்பனிய-பனியா பன்னாட்டுச் சுரண்டல் எதிர்ப்பே இப்போது முதன்மையான பணியாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## சென்னையில்

# தாழ்த்தப்பட்டோர் (தலித்) கலை விழா....

20-7-96 சனி மாலை, சென்னை - அண்ணா அரங்கம் கலை கட்டியிருந்தது. பல பகுதிகளிலிருந்தும் தாழ்த்தப்பட்டோர் கலை - இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், இயக்கவாதிகள், பதிப்பகத்தார், பார்வையாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கூடியிருந்தனர்.

1992 தொடங்கி இன்று வரை 'தலித் பண்பாட்டுப் பேரவை' புதுச்சேரியில் தொடங்கிய தலித் கலை விழாவை அடியொற்றி மதுரையில் தலித் ஆய்வு மையமும், நெய்வேலியில் நிறப்பிரிகை ஒருங்கிணைப்பிலும், விடுதலைச் சிறுத்தைகள் முயற்சியில் நெய்வேலி மற்றும் திருவண்ணாமலையிலும் நடத்தி திசைவழிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து சென்னையில் 'கோடாங்கி' சார்பில் தோழர் சிவகாமி முன்முயற்சியில் தாழ்த்தப்பட்டோர் விடுதலை இயக்கங்களின் துணையோடு கருத்தரங்கம் மற்றும் கலையரங்கம் நடத்தப்பட்டன.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் தோழர் திருமாவளவன் தலைமையில் விழா தொடங்கியது. சென்னையைச் சேர்ந்த மாணவர்கள் ம.க.இ.க. பாடல்கள் சிலவற்றைப் பாடி நிகழ்ச்சிகள் தொடங்க முரசறைந்தனர்.

கருத்துக்கும் கலைக்கும் முக்கியத்துவமளித்த இவ்விழாவில் மாறி மாறி இரண்டும் இடம் பெற்றன. அந்த வகையில் திருமாவளவனின் தொடக்கவுரையோடு, 'தலித் பார்வையில் மக்கள் தொடர்பு சாதனங்கள்' குறித்து தோழர்கள் ம.செ.சிந்தனைச் செல்வன், உஞ்சை ராசன் ஆகியோர் இன்றைய தொடர்பு சாதனங்கள் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராய் எவ்வாறு கருத்துருவாக்கம் செய்கின்றன என்பதையும் நாம் எவ்வாறு அவற்றைக் கையாள வேண்டும் என்பதையும் பதிவு செய்தனர். தோழர்கள் அரங்க. குணசேகரன், இரா அதியமான் இருவருமே தாழ்த்தப்பட்டோர் விடுதலையும் தமிழ்த் தேசியமும் - எவ்வாறு சாத்தியம் என்பதைத் தங்களுக்கேயுரிய பாணியில் கட்டுரையாக வாசித்தனர். தொடர்ந்து சந்திரபோசு, இரவிக்குமார் இருவரும் - இன்று தாழ்த்தப்பட்டோர் முன்மொழியும் 'இரட்டை வாக்குரிமை' யின் அவசியம் குறித்தும் அதற்கான நமது போராட்ட வழிகள் குறித்தும் பேசினர்.

கருத்தரங்கத்தைத் தொடர்ந்து 'பொது அரங்கம்' நடந்தது. இவ்வரங்கில் தோழர்கள் அ.மார்க்சு, வினோத், பேரா. கல்யாணி, கே.ஏ. குணசேகரன், நிக்கோலசு, புனிதபாண்டியன் ஆகியோர் பல்வேறு கருத்துகளை முன்னிலைப் படுத்தினர்.

இறுதியாய் திருமாவளவனின் முடிவுரைக்குப் பின், கருத்தம்மா அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

பலரது கருத்துரைகளில் ஏற்பட்ட முரண்கள் எவ்வாறு தாழ்த்தப்பட்டோர் அரசியலில் குழப்பத்தை உண்டாக்குவதாக அமைகிறது என்பதை இரவிக்குமார் முன்வைத்த... 'சேரியிலிருந்து வாழ்ந்த மண்ணை மறந்து வெளியேறும் தலித் நில அளவில் தமிழக எல்லை கோருவது நியாயமற்றது தேசிய இன வாத மாய விலையில் தாழ்த்தப்பட்டோர் மாட்டிக்கொள்ள வேண்டியதில்லை'

என்ற கருத்து ஐயப்பாடுடையது. சேரி என்ற ஒடுக்குமுறை எல்லையிலிருந்து பாதுகாப்புக்காக வெளியேறும் அதே சமயம் அங்கேயே வாழ்வுரிமைக்கான போராட்டமும் தொடர்கிறது. அதே போல ஒடுக்குகிற ஒரு தேசியமாக இந்தியா இருக்குமானால் அதை எதிர்த்து உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் தேசியமாக தமிழகம் இருக்கும். ஆனால் இத் தேசியத்தை நாம் எவ்வாறு நமது விடுதலையுடன் இணைக்கப்போகிறோம் என்பதிலேதான் குறுகிய இனம் பேசுபவர்களுடன் முரண்படுகிறோம் என்றும், மார்க்ஸ் கூறிய 'பின் நவீனத்துவம், வானவில் கூட்டணி " என்பதெல்லாம் இன்னும் புரிந்து கொள்ள முடியாத குழு வாதப் போக்குகளாகவே இருப்பதை இன்னும் ஆழமாகப் பார்க்க வேண்டியுள்ளது.

நிலவும் சாதி, மத, பார்ப்பனிய நிறுவன மற்றும் கருத்தியலுக்கு எதிராக நின்று தமிழனாகவும் பொதுமையாளனாகவும் எவ்வாறு போராடிக் கொண்டு வாழ முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய போராளிகளைத் தமிழ்த்தேசிய இனம் பேசுவதாலும் தமிழர் பண்பாட்டைப் பற்றிப் பேசுவதாலும் 'வெள்ளாளர்களின் கோமணமாகச் செயல்படுகிறார்கள்' என்று அ. மார்க்சு கூறுவது கொச்சைத்தனமானது. சுவற்றில் எறிந்த பந்தாய்ச்



படிப்பகம்

www.padippakam.com

சொற்கள் திரும்பிவரும் என்பதறியாது பேசியது தாழ்த்தப்பட்ட சமூகச் சிந்தனையாளர்க்கு உவப்பானதா - என்ற கேள்வி எழுகிறது.

கருத்தம்மா தனது நன்றியுரை யுடன் கருத்தையும் முன் வைத்தார். இன்றையச் சூழலில் தலித் ஐக்கியம் எத்துணை முக்கியத்துவம் உடையது என்பதையும் எதிர் காலத்தில் இவ் விழாவிற்கும் கோடாங்கி இதழுக்கும் உதவும் தொண்டு நிறுவனங்களின் உதவி நீளுமா என்றும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் இத் தேவைகளை நாம் தான் ஈடுகட்ட வேண்டும்...இது போன்ற விழாக்களைப் பிற தாழ்த்தப்பட்டோர் இயக்கங்கள் பகுதிகளின் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

நிகழ்ச்சிகளினூடாக ஏ.பி.நாயகம் தலைமை யிலான கலைக்குழு, சென்னை கலைக்குழு ஆகியன மாறி மாறி பறைஇசை முழக்கத்துடன் பாடல்கள், ஆடல்கள் எனப் புத்துணர்ச்சியூட்டினர்.

பல தலித் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு தலை நகர் சென்னையில் இப்படியொரு பதிவை ஏற்படுத்த பெரியதொரு முயற்சி எடுத்துக் கொண்ட தோழர் சிவகாமி அவர்களின் செயல் பின்பற்றத்தக்கது.

இதையொட்டி -இது போன்ற விழாக்களை மக்கள் மயப்படுத்த வேண்டியதையும் இயல்பா யுள்ள கலை வடிவங்கள் -வெளிப்பாட்டு முறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தவேண்டும் என்பதை யும் பார்ப்பனீய எதிர்ப்பை வெளிப்படுத்தும் வடிவங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதை யும் இவ்விழா நினைவூட்டியது.

இதுபோன்ற கலை - இலக்கியம், பண்பாடு, அரசியல் நிகழ்வுகளில் தொண்டு நிறுவனங்கள் நேரடியாகப் பங்கெடுப்பதும் இதற்கு அரசியல் வாதிகள், சிந்தனையாளர்கள், படைப்பாளர்கள் உறுதுணையாய் அமைந்து மக்களிடமிருந்து அந்நியப்படுத்திக் கொள்வதும் எவ்வகையில் நியாயம் என்ற கேள்வியோடு.... இந்து மதப் பார்ப்பனீயத்தை எதிர்கொள்ளும் நாம் கிறித்துவமதப் பார்ப்பனீயத்தையும் எதிர் கொள்ளாமலிருப்பது ஏன்... என்ற கேள்வியை எழுப்பி விடுதலை பெற வேண்டிய மக்களின் தீர்ப்புக்கு நாம் செவி சாய்க்க வேண்டிய அவசியத்தை விளக்கி விழாவில் வினியோகித்த த.ஒ.வி.இ.ன் துண்டறிக்கை சிந்தனையைத் தூண்டியது.

உஞ்சை ராசன்

# செங்கை மாவட்டத்தில் சாதிவெறி....

- கும்மிடிப்பூண்டி அருகே ஈகுவார்பாளையத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சொந்தமான நிலத்தை ஸ்ரீதர் என்பவன் ஆக்கிரமித்து இருக்கிறான். ஸ்ரீதரன் அமெரிக்க வல்லரசின் டூப்பார் டூபாண்ட் நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளான். கூலி வேலை செய்யும் தாழ்த்தப் பட்டோருக்கு எதற்கு நிலம் என்று கூறுகிறான். இதை எதிர்த்து செங்கை மாவட்ட த.ஒ.வி.இ. சாலை மறியல் என்று அறிக்கை வெளியிட்டது. இதை வட்டாட்சியர் துணை கொண்டு முறியடிக்கக் குண்டர்களை ஏவி விடுகிறான். மேலும் இந்த அரசிடம் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு ஏற்படும் என்று ஏங்கி நிற்கும் மக்களுக்கு ஏமாற்றமே மிச்சம். இப்போது நடக்கும் ஆட்சியரின் அடியாள்தான் இந்த ஸ்ரீதர் என்பவன். மக்களுக்குக் காவல் தி.மு.க.தான் என்று கொக்கரிக்கும் அரசு இதை கவனிக்குமா? என்பதே இந்த மக்களின் ஏக்கம்.
- கும்மிடிப்பூண்டி அருகே மாநெல்லூர் என்கிற சிற்றூரில் புறம் போக்கு நிலத்தைச் சரிசெய்து விவசாயம் செய்ய ஏற்ற நிலமாக மாற்றிப் பயிர் செய்து வாழ்ந்து வருகிறார் ஏசுகான் எனும் தாழ்த்தப்பட்டவர். இந்த நிலத்தை ஐ.ஜி. அலுவலகத்தில் பணிபுரியும் நபரும் ஆதிக்கச் சாதி வெறியர்களும் தாழ்த்தப்பட்டவருக்கு நிலம் எதற்கு என்று ஒரு செட்டியார் பெண்மணியிடம் ரூ 20 ஆயிரம் பெற்றுக் கொண்டு ஏசுகானை ஊரைவிட்டுத் தள்ளி வைப்பதும், யாரும் பேசக்கூடாது என்பதும் இன்றும் தொடரும் செய்தியாகவே உள்ளது. மேலும் இவர் பயிரிடும்போது மட்டும் அமைதியோடு இருக்கும் இந்த ஆதிக்கச் சாதியர்கள், பயிர் வளர்ந்து விட்ட பிறகு அறுவடை செய்து விடுகின்றனர். இதைக் கேட்கும் நபர்களையும் அடித்துத் துன்புறுத்தி ஊரைவிட்டுத் தள்ளி வைக்கின்றன. இவ் ஊர் முதலியார்களுக்குச் சாதகமாகக் கும்மிடிப் பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கி. வேணு என்பவரும் சாமரம் வீசுகிறார். இந்தச் சிக்கலில் தவிக்கும் நபரும் ஒரு தி.மு.க. காரர் என்பது குறிப்பிடத் தக்கது. எனவே தி.மு.க. ஆண்டாலும், அ.தி.மு.க. ஆண்டாலும் வேறுயார் ஆண்டாலும் நம் மக்கள் சிக்கல் மட்டும் மாறப்போவது இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

# இனி இப்படி அணுகினால் நல்லது!

இனி (சூலை கடகம் 2027) இதழில் "பலிக்காது உங்களின் பார்ப்பனக் கணக்கு" என்கிற தலைப்பில் தோழர் சுப. வீரபாண்டியன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

'திராவிடன் வீரம்' என்கிற சிவசேனை சார்புடைய நகைமுகன் அவர்களின் இதழில் தமிழ்நாட்டில் யார் யார் தெலுங்கர், கன்னடர், மலையாளி என்று பட்டியலிடப்பட்ட செய்தி ஒன்று முன்பு வெளிவந்தது. அதைத் துண்டறிக்கை யாகப் போட்டுக் கொண்டு கிருத்துவ நிறுவனச் சார்புடைய 'தமிழ் மாணவர் பேரவை'த் தோழர்கள், தமிழ்ச் சான்றோர் பேரவை சென்னையில் நடத்திய தமிழர் எழுச்சி மாநாட்டில் கொடுத்தனர். அதற்காகத் தமிழ்மாணவர்பேரவை ஆதரவு தோழர் ஒருவரைத் தாக்கினர் சான்றோர் பேரவையினர்.

"கருத்தில் என்ன முரண் இருந்தாலும் ஏன் இப்படி அடிக்க வேண்டும் அதற்கான விடையைக் கூறலாம்தானே" என்றோம் நாம்.

உடனே க்யூ பிரிவு போலீசை அனுப்பி நம்மையும் மிரட்டிப் பார்த்தார்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தவர்கள்.

அன்று முதல் இது தொடர் நிகழ்ச்சியாக மாறிவிட்டது.

தந்தை பெரியார் அவர்களைக் கொச்சைப் படுத்தி உறுதிப்படாத செய்திகளை எழுதிய குணா அவர்களின் நூல்களே சான்றோர் பேரவை உறவுடைய நிகழ்ச்சிகளில் விற்பனை செய்ய கூடாது என்று விற்பனையாளர்களை அடித்து விரட்டு வதும், போலீசில் பிடித்துக் கொடுப்பதுமே அவர் களின் நடைமுறையாகி விட்டது.

இதை அரசியல் அளவில் எதிர்கொள்ளாமல் 'தமிழ் மாணவர் பேரவை'த் தோழர்களும் விடாப்பிடியாக அவர்களின் நிகழ்ச்சிகளில் எல்லாம் துண்டறிக்கைக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டனர். அண்மையில்கூட தோழர் சுபவீ. அவர்களை மிகவும் கொச்சைப் படுத்தி வெளியிட்ட துண்டறிக்கை மிகவும் கண்டிக்கப்படவேண்டியது.

தோழர்சுபவீ. அவர்களிடமும், தமிழ் மாணவர் பேரவைத் தோழர்களிடமும் இது தொடர்பாக என்ன மாற்றுக் கருத்து இருக்கிறதோ அதைக் கலந்து பேசலாமே, அதற்கு ஏன் அடிக்க வேண்டும், அடிவாங்க வேண்டும் என்று கூறினோம்- ஆனால் அவர்கள் கேட்பதாக இல்லை.

தமிழ் மாணவர் பேரவைத் தோழர்களின் துண்டறிக்கைக்காக அவர்கள் அடிக்கப்பெறு கின்றனர்; போலீசில் ஒப்படைக்கப்படுகின்றனர் ஆனால் அதே அறிக்கையைத் தம் இதழில் வெளி யிட்ட நகைமுகன் அவர்கள் நெடுமாறன் அவர்களின் சுதேசி மாநாட்டிற்கு அழைக்கப்படு கிறார்- பேச வைக்கப்படுகிறார். அந் நிகழ்ச்சியைத் துணைநின்று ஏற்பாடு செய்த தமிழ்ச் சான்றோர் பேரவையினர் அதைக் கண்டு கொள்ளவில்லை.

இந்தப் பின்னணியில்தான் கடந்த இனி இதழில் தோழர் சுபவீரபாண்டியனின் கட்டுரை வெளியானது. அதில் உள்ள சில செய்திகள் தவறானவையாக இருப்பதைச் சுட்டி த.ஓ.வி.இ. தோழர் பொழிலன் ஒரு மடலை 'இனி' ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பியிருந்தார்.

ஆனால் அந்த மடலை முழுமையாக 'இனி' இதழில் வெளியிடாமல் பகுதியே வெளியிட்டிருந் தனர். அந்தப் பகுதி மடலைமட்டும் பார்த்து விட்டோ என்னமோ அதற்கு விடையாகப் பாவலர் இன்குலாப் அவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என எழுதியுள்ளார்கள்.

தமிழ் மாணவர் பேரவையினர் தந்த துண்டறிக்கையின் செய்தி பார்ப்பனியத்துக்குத் துணைபோவது என்பதில் உண்மை இருப்பது போலவே, அரசியல் வழி முரண்பட்ட அவர்களைப் போலிசில் பிடித்துக் கொடுப்பதின் வழி இந்த அரசை அங்கீகரிக்கிற பார்ப்பனிய மற்றும் அரசுச்சார்புப் போக்கு புலனாவதை பாவலர் இன்குலாப் கவனிக்கத் தவறுதல் நல்லதல்ல.

'தமிழ் மாணவர் பேரவையின் மீதோ, அவர்களின் அரசியலின் மீதோ நமக்குப் பல முரண்கள் உண்டு. ஆனால் அத்தகைய முரண் இருப்பதற்காக நாம் அவர்களை அடித்துத் துவைப்பது என்பதில் எந்த நியாயம் இருப்பதாகவும் நமக்குப் புலப்படவில்லை.

தோழர் இன்குலாப் சொல்வது போல் துண்டறிக்கைக் கொடுக்கிற தோழர்களின் அரசியலை நாம் கண்டிக்கவே செய்கிறோம்



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் அவர்கள் - தங்களின் அரசியலைத் துண்டறிக்கையாகக் கொடுப்பது என்கிற நடைமுறையை நாம் ஒப்புக் கொணடுதான் ஆக வேண்டும். அதே போது அத் துண்டறிக்கையின் அரசியலை அம்பலப்படுத்தவும், கண்டிக்கவும் வேண்டும்.

'இனி' இதழுக்கு தோழர் பொழிலன் எழுதிய மடல் :

*மதிப்புயர் தோழருக்கு*

*வணக்கம்*

*'இனி (கடகம்-2027) இதழில் தங்களின் -"பலிக்காது உங்களின்" கட்டுரையைப் படித்தேன். தாங்கள் என் பெயரையும் இணைத்து எழுதி இருந்த செய்தி அவ்வாறு பேசப்பட்டதாக எனக்கு நினைவில்லை.*

*தாங்களும் பாவலர் இன்குலாப் அவர்களும் பேசிக் கொண்டிருக்கையில் நான் வந்த போது, "தமிழ் மாணவர் பேரவை - என்பது தங்கள் அமைப்பா என்று தாங்கள் கேட்க," 'இல்லை இது தமிழக மாணவர் முழக்கம் இதழ் நடத்துகிற வெங்காலூர் குணா அவர்களின் அரசியலை முழுமையாய் ஏற்றுக் கொள்ளுகிற இளைஞர்களின் அமைப்பு, என்றேன். தாங்கள்' இல்லை இந்தத் துண்டறிக்கையைக் கொடுக்க ஏன் அனுமதிக்கிறீர்கள் என்றதற்கு, "எனக்கும் அத் துண்டறிக்கையில் உள்ள கருத்தில் உடன்பாடு இல்லை. ஆனாலும் கருத்தைக், கருத்தால்தான் மறுக்க வேண்டும். எனவே தாங்கள் வேண்டுமானால் கருத்தை மறுத்துப் பேசுங்களேன்." என்றேன். உடனே பாவலர் இன்குலாப் அவர்கள் "நான்கூட அந்த இளைஞர்களிடம் பேச வேண்டும் என எண்ணினேன்" என்றதற்கு "இங்கு இருக்கிறார்கள் நான் அழைத்து வரட்டுமா?" என்றேன் நான், "இல்லை இப்போது வேண்டாம் பிறகு பேசலாம்" என்றார் பாவலர் அவர்கள். ஆனால், தாங்கள் இதை வேறு வகையில் எழுதியது சரியில்லை.*

*மேலும், நிகழ்ச்சிகளில் அவ்வகைத் துண்டறிக்கைகளைக் கொடுத்து விட்டு அந்த இளைஞர்கள் ஓடிவிடுவதாகத் தாங்கள் எழுதியதும் சரியான செய்தியில்லை.*

*தமிழ்ச் சான்றோர் பேரவை- சென்னை மாநாட்டிலும் சரி, மதுரையில் நெடுமாறன் ஐயா அவர்கள் கூட்டியிருந்த சுதேசி மாநாட்டிலும் சரி, சென்னை- இராணி சீதை மன்றத்தில் மீண்டும் தமிழ்ச் சான்றோர் பேரவை கூட்டிய பட்டிமன்ற நிகழ்ச்சியிலும் சரி அந்த இளைஞர்கள் அடித்துத் துவைக்கப்பெற்றும், காவல் துறையில் தமிழ்ச் சான்றோர் பேரவையினரால் ஒப்படைக்கப்படவுமே செய்தனர் என்பது தாங்கள் அறியாததாக இருக்க முடியாது.*

*தந்தை பெரியார் அவர்களின் சிந்தனை வழிப்பட்ட நம் செயற்பாடுகள் இத்தகைய நடைமுறையில் இருப்பது சரியானதாக இருக்காது. ஐயா பெரியார் அவர்கள் இத்தகைய நடைமுறையை மேற்கொள்பவர் அல்லர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தம்மை எதிர்க்கிற அரசியலுக்குக்கூடப் 'பண்பாக விடை கூறி மறுக்கிற' அவரின் அணுகுமுறை ஒரு போதும் எதிர் கருத்து கூறுவோரை அடித்து விரட்டுவதாகவும், காவல்துறையில் பிடித்துக் கொடுப்பதாகவும் இருந்ததில்லையல்லவா.*

*இந்த அரசக் கட்டமைப்பின் காவல்துறையை மறுக்கிற நாம் துண்டறிக்கை கொடுக்கும் இந்த இளைஞர்களை அவர்களிடமே ஒப்படைப்பது எந்தவகையில் சரியானது.*

*எனவே தாங்கள் இது குறித்து எண்ணுவீர்கள் என நம்புகிறேன்.*

*பிறபின்*
*தோழமையுடன்*

**பொழிலன்**



படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் போராட்டங்கள் — சில படிப்பினைகள்...

*தொழிலாளர்களுக்கென நல வாரியம்,*
*தொழிலாள ஆணையாளர்,*
*தொழிலாளர்களுக்கென அரசுச் செயலர்,*
*தொழிலாளர் அமைச்சர்,*
*இவர்களால் இயற்றப்பட்ட சட்டம்,*
*இவற்றைக் கட்டிகாக்க வழக்கு மன்றம் -*

இவையெல்லாம் தொழிலாளர் என்கிற போர்வை போர்த்தியிருந்தாலும் உண்மையில் முதலாளிகளின் உடைமை உரிமைகளைக் காப்பாற்று வதற்காகவும், முதலாளியத்திற்கானக் கட் டமைப்பை எந்த வகையிலும் சீர்குலைக்க அனுமதிக்காததாயும் சில இடங்களில் முதலாளிகளின் கட்டுப்பாடற்ற உரிமையைப் பறித்தெடுக்க முயற்சிக்கின்ற போதெல்லாம் தொழிலாளர்களை ஒடுக்குவதற்காகவும்தான் மேற்கண்ட நலத் துறைகளின் கண்காணிப்பு இருந்து வருகின்றன.

தொழிலாளர்களுக்கும் முதலாளிக்குமான வேலை குறித்த ஒப்பந்தங்களையோ அல்லது முதலாளிய நியாயங்களையோ தொழிலாளர்கள் மீற தலைப்படுகின்ற போதெல்லாம் தொழிலாளர் மீது ஒடுக்குமுறைகளைத் தடியடியும், சிறையும், உயிர்பறிப்புகளும், வேலைப்பறிப்புகளும், பட்டினி போடுவதன் மூலமும், அச்சத்தின் மூலமாகவும் தொழிலாளர்களைப் பணிய வைக்கும் முயற்சியெல்லாம் அரசுத்துறைகளின் ஆற்றலோடு செய்யப்படுகின்றது.

ஆனால், இதையே முதலாளிகள் மீறினால், தண்டனைக்கோ, தண்டிப்பதற்கோகூட எந்த முதலாளியும் உள்ளானதில்லை. இருக்கின்ற சில ஆதரவு சட்டங்களையோ ஒப்பந்தங்களையோ நடைமுறைப்படுத்தச் செய்வதற்குக்கூட தொழி லாளர்கள் போராட்டங்கள் நடத்த வேண்டி யுள்ளது. இதற்குச் சான்றாக உள்ளன சென்னையில் உள்ள ஆலைகளான எம்.ஆர்.எப்., பின்னி., ஐ.ஓ.சி.எல், மெட்டல்பாக்ஸ் ஸ்டேண்டர்ட் மோட்டார்கள் போன்ற ஆலைகள்.

தொழிற்சங்கத்திற்கும் ஆலை நிர்வாகத்திற் கும் இடையில் அரசு முன்னிலையில் போடப் பட்ட முத்தரப்பு ஒப்பந்தங்களை அமுல்நடத்த மறுக்கின்றான் எம்.ஆர்.எப். முதலாளி.

இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் வழி தோழர் சிங்காரவேலர் போன்றவர்களால் போராட்டத்திற்கானத் தலைமை கொடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தொழிலாளர்களை வயிற்றிலடிக்க மழையைக் காரணம் காட்டி மில்லை மூடுகின்றான் பின்னி முதலாளி.

500 தொழிலாளர்களின் வேலையைப் பறிக்க திட்டமிட்டதை எதிர்த்துத் தொழிற்சங்க நிர்வாகி கள் மீது கொலை வழக்குப்போட்டு சிறையில் தள்ளி தொழிலாளர்களை நசுக்க நினைக்கின்றான் ஐ.ஓ.சி.எல். முதலாளி.

இப்படிச் சுரண்டல் வடிவங்களைப் பொதுமக்களின் மீது மட்டுமல்லாது அந்தந்த ஆலையில் உழைக்கும் தொழிலாளர்களையும் சுரண்டிக் கொள்ளையடித்து, தன் அதிகார எல்லைகளை விரிவாக்கிக் கொள்வதும் தொழிலா ளர்களால் சில நேரங்களில் ஆலை உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதன் மூலம் கோரிக்கைகளை ஏற்கச் செய்ய தன்னை நெருக்குகின்றார்கள் என்பதை உணர்ந்த முதலாளி, அந்த நெருக்கு தலுக்குத் தானே ஆளாகிவிடக்கூடாது என்ற பாதுகாப்புணர்வோடு ஒரு தொழிற் சாலையைப் பல பகுதிகளுக்குப் பிரித்து விரிவுபடுத்தி ஒரு பகுதியில் உள்ள ஆலையில் தொழிலாளர்கள் போராடினால் அதைக் கண்டு கொள்ளாமல், அதன் மீது அக்கறை செலுத்தாமல், மற்ற பகுதிகளில் இருக்கக் கூடிய தன்னுடைய தொழிற் சாலைகளில் ஓவர்டைம் என்கிற பெயரில் தொழிலாளர்களுக்குச் சிறிது சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்து உற்பத்தி பாதிப்பை ஈடுகட்டிக் கொள்கிறான்.

இந்த நரித்தனத்தை உணராத தொழிலாளர்கள் அதற்குப் பலியாகி தங்களுக்குள் ஒற்றுமைச் சிதைவை ஏற்படுத்தி கொள்கின்றார்கள்.

இந்தப் போக்கை உணர்கின்ற சில தொழிற் சங்கங்கள், முதலாளியத்தின் நரித்தனத்தை எதிர்க்கக் கனிகின்ற போதே அந்தந்த பகுதிகளில் உள்ள சமூக பின்னணியைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு குண்டர் களைப் பயன்படுத்தித் தொழிலாளர்களை, தொழிற் சங்கத்தை ஒடுக்குவதும் இதற்குத் துணையாகப் போலீசு மற்றும் அரச எந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்வதும், பலவீனமான சில தொழிற்சங்கப் பொறுப்பாளர்களைத் தொழி லாளர்களை விலைபேசி தொழிலாளிகளுக் கெதிராய்த் திருப்புவதுமாய் வளர்ந்து கொழுக் கின்றது முதலாளியம்.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு ஆலையிலும் நாளுக்கு நாள் தொழிலாளர்களுக்கு வேலைப்பளுவைத் திணித்து, உற்பத்தி உயர்த்தப்படுவதும், தொழிலாளர் எண்ணிக்கை குறைக்கப்படுவதும் இந்தப் போக்கிற்குத் திறந்த சந்தையின் மூலமாக உலகத் தொழில்போட்டியைக் காரணம் சொல்வதுமாகத் தொழிலாளர்களின் வாழ்க்கை நாளும் குறைபட்டுக் கொண்டிருக்கின்றது.

இவற்றை முறியடிக்க எதிர்த்துப் போராட வேண்டிய தொழிலாளர்களோ தவறான தொழிற்சங்க நடவடிக்கையினால் உரிமைப் போராட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டு போனஸ், சம்பள உயர்வு போன்றவற்றிற்காக என்று மட்டுமே எனச் சுருக்கிக் கொண்டு சீரழிந்து கொண்டிருக்கின்றன.

தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக என்பதை வெறும் வாய் முழக்கமாக மட்டுமே கொண்டுள்ள தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் ஒற்றுமைப்படுத்துவதற்கானப் பணிகளைச் செய்யாமல் அந்தந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சார்ந்த கட்சிகளின் பொருளியல் பற்றாக் குறையைத் தீர்த்துக் கொள்வதற்கான கூடாரங் களாகத் தொழிற்சங்கங்கள் மாறிக் கொண்டு வருகின்றன.

இவையெல்லாம் கவலையளிப்பதாக இருக்கையில் அண்மையில் நடந்த எம்.ஆர்.எப், பின்னி, ஐ.ஓ.சி.எல், ,போன்ற நிறுவனங்களில் தொழிலாளர்களால், தொழிற்சங்கத்தால் நடத்தப்பட்ட போராட்ட முறைகள் நம்பிக்கையளிப்பதாகவும் செழுமைப்படுத்தப்பட வேண்டியதாகவும் உள்ளன.

எம்.ஆர்.எப், பின்னி, தொழிற்சாலை போராட்டத்தில் தொழிற்சங்கமும், அதன் தலைமையும் மற்ற ஆலைத் தொழிலாளர்களையும் போராட்டத்தில் ஈடுபடுத்தியதையும் அதோடு நிற்காமல் சமூக விடுதலைக்கான இயக்கங்களில் துணையையும் ஏற்று தொழிலர்ளர் போராட்டத்தை அந்த ஆலையோடு நிறுத்தாமல், சமூக விடுதலைக்கான இயக்கங்கள் பகுதி உழைக்கும் மக்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து சமூகத்தின் சிக்கலாக விரிவுபடுத்திச் செயல்பட்ட போக்கு பாராட்டக் கூடியது, செழுமைப்படுத்த வேண்டியது என்பதை உணர்வோம்.

# நாயனார் சாதியின் மலையாளச் சிந்தனை!

அண்மையில் சென்னையில் 'தமிழ்நாடு மலையாளிகள் சங்கக் கூட்டமைப்பின்' சார்பில் கலைக் கல்லூரி திறந்துவைக்கப்பட்டது.

மொழி, சாதி, இனம் போன்ற வெறி உணர்வுகளையெல்லாம் எதிர்ப்பதாகப் பேசும் மார்க்சியப் பொதுவுடைமைக்கட்சி (சி.பி.எம்)யின் கேரளா முதல்வர் ஈ.கே. நாயனார் அதில் கலந்துகொண்டார்.

மொழி, சாதி, இன வெறிகளை எதிர்க்கச் சொல்வது என்பது மற்றவர்களுக்காகத்தான் என்பது அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிற பெயரிலேயே தெரியும்.

தன்னுடைய சொந்தப் பெயரைக்கூட 'நாயனார்' - என்கிற சாதிப் பெயரை இணைக்காமல் கூற முடியாத அளவிற்கான பொதுவுடமையர்(!)கள் அல்லவா அவர்கள்!

அவர் அந்த நிகழ்ச்சியில் பேசுகிறபோது "பிற மாநிலத்தில் வாழ்கிற மலையாளிகள் கேரளாவில் வந்து முதலீடு செய்ய வேண்டும்." என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா முழுமையும் ஒன்று என்றும், 'இந்தியப்பாட்டாளிகள்' என்றும் கூறிக்கொள்ளும் இவர்கள் சாதி வெறியை விட்டுவிட்டவர்களும் இல்லை, இன உணர்வு அற்றவர்களும் இல்லை என்பது இதன்மூலம் மேலும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்திய ஒற்றுமை என்று பேசுகிற மலையாளிகள் எங்கு முதலீடு செய்தாலும் ஒன்றுதானே - இன்னும் சொன்னால் இவர்களே ஆட்சிசெய்யும் மேற்கு வங்கத்தில்கூட அவர்கள் முதலீடு செய்யலாம் தானே!

கேரளாவிற்கு முதலீடு செய்ய மலையாளிகளை அழைப்பது என்பது இவர்களின் பார்வையில் இனவெறி இல்லையா?

இவர்களின் பொதுவுடைமைப் பேச்சும் செயல்பாடும் எந்த அளவில் போலியானது என்பதைப் புரிந்து கொள்வோம்!



படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைக்கான களத்தில் செய்திகள்

● 21.1.96 அன்று சென்னையில் த.ஒ.வி.இ. ஒருங்கிணைத்த காயக்கட்டு ஊர்வலத்தில் பல இயக்கங்களின் சார்பில் 500 பேர் அளவில் பங்கேற்று, ஈழ விடுதலைப் போராட்டகளத்திலும், தமிழக தென் மாவட்டங்களில் ஆதிக்கச் சாதி எதிர்ப்புப் போராட்டக் களத்திலும் அடிபட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஆதரவாய் இந்திய சிங்கள ஆதிக்க அரசுகளைக் கண்டித்துக் கண்டனக் குரல் எழுப் பினர்.

● 26-1-96 மொழிப் போர் வீரர்கள் வீர வணக்கநாள் அன்று ஆங்கில, இந்தி, சமஸ்கிருத ஆதிக்க மொழிகளை அகற்றிடவும், தமிழைக் காத்திடவும் த.ஒ.வி.இ பெரியார் மாவட்டத்தில் விளக்கந்தந்து துண்டறிக்கை மக்களிடையே பரப்பப்பட்டது.

● 8-3-96 அன்று மாவட்டகல்வி அலுவலகம் முன் தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் உறுப்பியக்கமான த.ஒ.வி.இ. நாகர்கோயிலில் ஒருங்கிணைத்த ஆர்ப்பாட்டத்தில் 100 பேர் அளவில் திரண்டு தமிழகத்தில் ஆங்கில மொழியை அரசு மாணவர் கட்கு மேலும் உறுதிப்படுத்துவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### முக்கிய மூன்று கோரிக்கைகள்

1. ஆங்கில வழிப் பள்ளிகளுக்குத் தனி இயக்கம் தொடங்காதே 2. தமிழ் வழிப் படித்த பள்ளி மாணவர்கட்கு உயர் கல்வியில் மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் ஒதுக்கீடு செய். 3. தமிழ்-ஆங்கிலம் இரண்டையும் சேர்த்து 70 மதிப்பெண்ணைத் தேர்ச்சிக்குரியதாக வரையறைசெய்.

தோழர் வெற்றிச்செல்வன், இராசரத்தினம், முரசொலி மாறன் த.ஒ.வி.இ. சார்பில் கண்டன உரையாற்றினர். மகிழரசன், தோழர் அசுரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

● செங்கை மாவட்டத்தில் கும்முடிப் பூண்டி அருகே அமெரிக்க வல்லரசின் தாபர் டூபாண்ட் தொழிற்சாலை பங்குதாரர் ஆதிக்கச் சாதியாளர் ஸ்ரீதர் தாழ்த்தப்பட்டவர்களின் பொது நிலமான ஈகுவார்பாளையத்தில் 331/2 ஏக்கரில் 15 ஏக்கர் குடிசையிட்டு அனுமதியற்ற ஆற்று மணலை அரசுத் துணையோடு கொட்டி தொழிற்சாலைக்கு மாற்றுகிறார். நிலத்தை மக்கள் சாலை மறியல் போராட்டம் என த.ஒ.வி.இ.யும் மற்ற இயக்கங்களும் அறிவித்தன.

● 22-3-96 அன்று ஒடுக்கப்பட்டோர் கலை இலக்கிய மைய அமைப்பாளர் தோழர் ஆரோ-செந்தமிழன் தலைமையில் மாவீரன் பகத்சிங் நினைவேந்தல் அரங்கக்கூட்டம் நெல்லிக்குப்பத்தில் நடந்தது. தோழர் தியாகு, தோழர் சுப. வீரபாண்டியன் தமிழ், தமிழர் இயக்கத்தின் சார்பிலும் தோழர் இளங்கோவன் த.ஒ.வி.இ. சார்பிலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

● 17-2-96 அன்று செங்கை மாவட்ட கும்மிடிப்பூண்டியில் தமிழீழத்தில் சிங்கள வெறி அரசாலும், தமிழகத்தில் தென் மாவட்டங்களில் ஆதிக்கச் சாதி வெறி அரசாலும் கொடுமைகளைக் கண்டித்து தோழர் தமிழ்ப் பாண்டியன் த.ஒ.வி.இ. தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்து பங்கேற்றனர். த.ஒ.வி.இ. தோழர்கள் சிறப்புரைகளுடன் அனுப்பம்பாளையம் குப்பம் தோழர் வெங்கடேசன், அம்பேத்கர் இளைஞர் சங்கம் தோழர் கிரு ணன், ஆதித்தமிழர் விடுதலை இயக்கம் பொன்னேரி தோழர் வினோத், திராவிடர் கழகம் தோழர் போசு முதலானோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

● அரக்கோணம் அடுத்த குருராசப் பேட்டை பெருமளவில் முதலியார் வாழும் ஊர். பக்கத்தில் குறைந்த அளவில் தாழ்த்தப்பட்டோர் ஒடுங்கிக் கிடக்கும் சேரிமக்கள் கடை, பேருந்துகளுக்கு ஊருக்குத்தான் வரவேண்டும். பொழுது போக்கு நிகழ்வுக்கும்தான். பரம்பரை ஆதிக்கச் சாதி எழுதப் படாத சட்டம். ஊரில் சர்க்கஸ் பார்க்கவந்த தாழ்த்தப்பட்டவரை முதலியார் அடித்தார். திருப்பி அடிவாங்கினார். ஊரும், போலீசும் திரண்டு சோகனூர் சேரியை நாசமாக்கிவிட்டார். த.ஒ.வி.இ. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் சார்பில் கண்டனத் துண்டறிக்கை மக்களிடம் பரப்பப் பட்டது.

● தலித் (தமிழகத் தாழ்த்தப்பட் டோர்) கூட்டு இயக்கங்களின் குழு தேர்தல் புறக்கணிப்புப் பற்றிய 10-4-96 அன்று திருச்சியில் விளக்கப் பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவானது. அன்று தியாகி இமானுவேல் பேரவையால் ஒருங்கிணைக்கப்பட்ட பொதுக் கூட்டத்தில் த.ஒ.வி.இ. சார்பில் தோழர் பொழிலன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

● 7-4-96 தமிழக தென்மாவட்டங்களில் குறிப்பாகவும் மற்ற பகுதிகளிலும் நடக்கும் ஆதிக்கச்சாதி வெறி அழிப்புக் கருத்தரங்காய் த.ஒ.வி.இ. ஈரோட்டில் நடத்தியது. தோழர் இளங்கோ, தோழர் பொழிலன், த.ஒ.வி.இ. சார்பிலும் தோழர் அதியமான் ஆதித்தமிழர் பேரவை சார்பிலும் பங்கேற்றனர்.

● 11-4-96 அம்பேத்கர் பிறந்தநாள் பொதுக்கூட்டம் த.ஒ.வி.இ. தென் சென்னையில் தியாகிகள் வீர் வணக்க நாள் நிகழ்வாகவும் நடத்தப் பட்டது. பேராசிரியர் இன்குலாப் மற்றும் அம்பேத்கர் மக்கள் கழகத் தோழர் நுங்கை பாபு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பாவலரேறு பாசறைத் தோழர் ரவி பங் கேற்றார். த.ஒ.வி.இ. தோழர் தமிழோசை, உலகமுதல்வன் ஆகியோர் பங்கேற்றனர்.

● இந்து மத, பார்ப்பனிய மற்றும் ஆதிக்கச் சாதி வெறி எதிர்ப்புப் பேரணியும் பொதுக்கூட்டமும் 14-4-96 புரட்சியாளர் அம்பேத்கர் 105 ஆவது பிறந்தநாள் விழாவாகப் பட்டுக் கோட்டையின் தலித் பண்பாட்டுப் பேரவையில் நடத்தப் பெற்றது.

● தோழர் விசயலக்குமி (எ) வெற்றிச் செல்விக்கும் தோழர் மார்க்சு வேனிலுக்கும் வந்தவாசியில் 22-5-96ல் வாழ்க்கைத் துணை ஒப்பந்தவிழா



படிப்பகம்

www.padippakam.com

திருமா.செ. தமிழ்மணி தலைமையில் நடைபெற்றது. த.ஒ.வி.இ. சார்பில் தோழர் வெற்றிச் செல்வன் வாழ்த்துரைத்தார். தோழர் கல்யாணி (ம.க.இ) தி. ஜான்கிரூஸ் (இ.கு.க.) ஆகியோரும் வாழ்த்துரையாற்றினார்கள்.

● எல்லா ஆட்சிக் காலங்களிலும் ஆதிக்கச்சாதி வெறி தொடர்ந்ததை விளக்கி, தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி தமிழக அளவில் துண்டறிக்கை மற்றும் சுவரொட்டி இயக்கம் த.ஒ.வி.இ. யினால் ஏப்ரல் '96 இல் நடத்தப்பட்டது.

● 29-6-96 அன்று சென்னையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான போலீசு வெறியாட்டத்தை எதிர்த்துக் கண்டன உண்ணா நோன்பு த.ஒ.வி.இ.யின் ஒருங்கிணைப்பில் மேற்கொள்ளப்பட்டது. நெல்லை மாவட்டம் பழவூர் கிராமத்தில் நடந்த போலீசு வன் முறையைக் கண்டித்து அம்பேத்கர் மக்கள் கழகம் தோழர் நுங்கைபாபு உரையாற்றினார்கள். அம்பேத்கர் புரட்சிகர மக்கள் கட்சி - ராஜா, அ.ம.க. - அக்னி ஆறுமுகம் தமிழ்நாடு பறையர் பேரவை - சாமுவேல், தமிழர் குடியரசுக்கட்சி - ஐதீனன், அ.சி.இ - ஆதித்தமிழன், விடுதலைச் சிறுத்தைகள் -திருமாவளவன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். த.ஒ.வி.இ. சார்பில் தோழர்கள் தமிழரசன், பொழிலன், தமிழோசை, சுயல் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். ●

# மடல்கள்

● தமிழீழப் போராட்டத்தில் நம் கடமை என்ன என்பதை மிகத் தெள்ளத் தெளிவாகவும் அழகாகவும் சித்தரித்திருந்தீர்கள். தெற்காசிய நாடுகளின் விளையாட்டுக் கூட்டமைப்பில் (SAF) உள்ரகசியங்கள், அந்த விளையாட்டை நடத்தியதன் நோக்கங்கள் அதனால் அவர்களுக்கு என்ன நன்மைகள் என்பதைத் தீர்க்கமாகக் கூறியது மட்டுமல்லாமல் இன்றைக்கு இலங்கையில் தனி ஈழம் கேட்டுத் தமிழன் போராடிக் கொண்டிருக்கிறான். நம் தமிழ்நாட்டிலும் தம்உரிமையை நிறைவேற்ற ஒவ்வொரு தமிழனும் தம் இனம் காக்க, மொழி காக்க உரிமைக்குப் போராடபின் வாங்கக்கூடாது - என்பதை மிக அழகாக கூறியதல்லாமல், நமது நாட்டை அன்றைக்கு அரசர் காலத்தில் கூறுபோட்டது போல் இன்றைய அரசியல்வாதிகள் கூறு போடுவதைத் தைரியமாகச் சொல் லுங்கள்.

**– கனிமொழி கருணாகரன் கதிர்வேடு**

● உங்களுக்குக் கடைசியாக எழுதிய கடிதத்தில் ஈழத்தில் நடக்கும் இன்னல்கள் சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவிப்பதோடு முதலில் தமிழகத்தில் ஈழ அகதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குக் கண்டனம் தெரிவியுங்கள் என்று கேட்டிருந்தேன். நான் கூறியது சரிதான்.

முதலில் இதைத்தான் செய்ய வேண்டும் என்பதற்கு ஏற்றது போல் இன்னொரு சம்பவம் நடந்துள்ளதாக அறிகிறேன். எவ்வளவுதான் கொடுமைகள் நடந்தாலும் பரவாயில்லை, சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை, எக்காரணம் கொண்டும் இனி ஈழத் தமிழர்கள் அகதியாக தமிழ்நாட்டுக்கு வரக்கூடாது என்று குறிப்பிட்டிருந்தேன். இதையே பிரச்சாரமாகச் செய்யும்படி அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதினேன் ஏனெனில் இங்கு அகதிகளாக வருபவர்கள் விடுதலைப் புலிகள் என முத்திரை குத்தப்பட்டு இரும்பு முகாமில் அடைக்கப்பட்டு சித்திர வதை செய்யப்படுகின்றனர். இவ்வாறு இங்கு சிறப்புமுகாமுக்குள் ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைப்பதை விட ஈழத்தில் ஒரே நாளில் சாவது மேல் அல்லவா?

**– பாலச்சந்திரன், வேலூர் முகாம்.**

● வணக்கம்

நான் தங்களைப் பற்றி அறிந்தவனில்லை. 'பெரியாரின் சிந்தனைகள்' - என்ற தொகுப்பு நூலை 1994-இல் வெளியிட்ட திருச்சி-சிந்தனையாளர் கழகத்தின் தலைவன் நான். தோழர் ஆனைமுத்து அவருடைய சிந்தனையாளன் அச்சகத்தில் இருக்கும்போது அங்கு நான் காண நேர்ந்த உங்கள் மக்கள் தமிழகம் இதழில் நான் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள கருத்துகள் வெளிவருவது கண்டு, அதனை அஞ்சலில் பெற்றுப் படித்து வருகிறேன். ஓரிரு மாதங்கள் வரவில்லை போலும். இதழ் நடத்துவது எவ்வளவு கடினமானது என அறிவேன். பல இடர்ப்பாடுகளுக்கிடையேயும் தொடர்ந்து நடத்த முயலுங்கள்.

கும்பம் இதழில் 'துணையின்றி' என்ற நீங்கள் எழுதியுள்ள அனைத்தும் என் உள்ளத்திலும் அவ்வப்போது எழும் சிந்தனைகளே. தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தமிழ்நாட்டைத் தனி நாடாக்கி அங்கு சாதி மத மற்ற சமுதாயத்தை ஏற்படுத்தி உலகுக்கே வழிகாட்ட வேண்டும் என்பதே என் குறிக்கோள்.

பார்ப்பனர் விதைத்த நச்சுச் சாதியம் வேரூன்றி இன்றைக்குக் கீழே இருக்கிற ஒடுக்கப் பட்ட மக்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்டு செத்தொழியும் நிலைக்குத் தள்ளி விட்டது. மூலகாரணம் பார்ப்பன ஆதிக்கமே. பார்ப்பனர்களுக்குத் தெரியும் - சூத்திர மக்கள் என்றைக்கும் ஒன்றுசேர்ந்து தம்மை ஒழிக்க வரமாட்டார்கள் என்று.

இந்தியாவை விடுங்கள், தமிழ்நாட்டிலாவது சாதியை ஒழித்தாக வேண்டும்.

அதற்கு முதல்படி தொடக்கம் கீழே இருந்து தொடங்க வேண்டும். கீழே இருந்து என்றால் தாழ்த்தப்பட்டவனிலிருந்து தொடங்கவேண்டும். தாழ்த்தப்பட்டவரிலேயே கடைசியராக உள்ள சக்கிலியரிலிருந்து தொடங்க வேண்டும். தம்மை அருந்ததியர் என்று சொல்லிக் கொள்வதனாலேயே தாம் தேவர் (தேவ லோகத்திலிருப்பவர்கள்) களாகப்



படிப்பகம்

www.padippakam.com

போவதில்லை. அதைப் போலவே பள்ளர்களும் தேவேந்திரர் என்று சொல்லிக் கொண்டால் இந்திரனின் மாமன் மச்சான் ஆகப் போவதில்லை. இவையெல்லாம் பார்ப்பனரின் சூழ்ச்சிகள். முதலில் நாங்கள் இந்துவல்ல; தமிழர்கள் - தூய தமிழர்கள் என்று சொல்லவேண்டும். கிறித்தவம், இசுலாம், போன்ற இதர சாக்கடைக்குள்ளும் போய்ப் புரள வேண்டியதில்லை. சக்கிலியர், பறையர் பள்ளரோடு இணைய வேண்டும். பின்னர் படிப்படியாக அடுத்தபடியில் இருக்கிற சாதியாரோடு இணைய வேண்டும். இதற்குக் குறுக்கே நிற்கிற எதையும் தூள் தூளாக்கவேண்டும்.

பொறிஞர். கு.ம. சுப்பிரமணியன், தூத்துக்குடி

---

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவுமலர்

இம்மலரில் முற்பகுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் வாழ்க்கை வரலாறு (சுருக்கம்), தென்மொழி வரலாறு மற்றும் பாவலரேறு ஐயா அவர்கள் வெளியீடுகள் - நடவடிக்கைகள் பற்றி படிக்கும் போது வழிகாட்டுதலாக இருக்கிறது.

அன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் தேர்ந்தெடுத்த செயல்பாடுகளில் தன்னைப் பொருத்திக் கொண்டார் என்பதன் வழியான தமிழக மக்களின் அடிப்படை குறியீடாக தமிழ் மொழி பற்றி செயல்பாடுகளின் விரிவான களத்தை - எல்லையை உணர முடிகிறது.

பிற்பகுதியில்,

50-க்கும் மேற்பட்ட கட்டுரைகள் வழி பல்முனைப்பட்ட இயக்கங்கள் ஐயாவின் வாழ்வை நினைவு கூர்கின்றன. பலரின் கட்டுரைகள் தொகுப்பு அவரவர் பார்வையில் ஆய்வுக்குள்ளாக்கும் போது அடுத்து செய்ய வேண்டியதற்கான படிப்பிணையாக அமைவது உறுதி.

எடுத்துக்காட்டாக, ஐயாவே தமிழ் மொழி பற்றிய சரியான புரிதலைப் பற்றி பேசுவதன் வழி, வாழ்க்கையின் கடமையைப் புரிந்து கொண்டு தன் குடும்ப நலனோடு மட்டுமே நின்று விடுகின்றனர் எனச் சுட்டியுள்ளார். இந்நிலையைத் தாண்டி வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வழிகாட்டுதலை நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

மலர் பெறுவதற்கான தொடர்புக்கு : தென்மொழிநூல் வெளியீட்டு விற்பனையகம், 5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை — 5.

---

## வரப்பெற்றோம் :

* எகிறு (தலித் சிறுகதைகள்) ஆசிரியர் உஞ்சைராசன், வெளியீடு : பஃறுளிபதிப்பகம்,183,வெட்ராங்கம் தெரு, சென்னை - 5. விலை உரு 20-
* எங்கே எமது முகம் (தலித் கவிதைகள் தொகுப்பு) ஆசிரியர் தலையாரி : விடுதலைச் சிறுத்தைகள் புதுச்சேரி. வெளியீடு : பஃறுளிப்பதிப்பகம் சென்னை - 5 விலை 20-
* இன்குலாப் கவிதைகள் (தொகுதி 2) (தமிழீழப் போராட்டப் பாடல்கள்) தமிழாட்சிப் பதிப்பகம் சென்னை - 1 கிடைக்கும் இடம்:பஃறுளிப்பதிப்பகம் சென்னை - 5 விலை உரு 10-
* வள்ளுவத்தின் வீழ்ச்சி ஆசிரியர்: குணா நூல்கிடைக்கும் இடம்: பஃறுளிப்பதிப்பகம் சென்னை - 5 விலை உரு 120-
* நூறாசிரியம் ஆசிரியர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், வெளியீடு: தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம், திருவல்லிக்கேணி சென்னை - 5 விலை உரு 100-

## மக்கள் போராளிக்கு வீரவணக்கம்

கல்பாக்கத்தில் பொதுமக்கள் இயக்கங்களோடும் புரட்சி முற்போக்கு இயக்கங்களோடும் இணைந்து செயல்பட்டு வந்த தோழர் ஆ. சண்முகம் அவர்கள் கடந்த 5-8-96 அன்று தனது வாழ்க்கையில் 72ஆம் அகவையில் நிறைவெய்தினார். அவர்தம் இறுதி நிகழ்வு அவர் 6 ஆண்டுகளுக்கு முன் கோரியபடி சாதி,மத சடங்குகளற்ற நிகழ்வாக கூவத்தூரில் நடந்து முடிந்தது அவரது மறைவு கல்பாக்கம் வாழ்மக்களுக்கும், இயக்கங்களுக்கும் இழப்பாகும்.

அவருக்கு கல்பாக்கம் பகுதி மக்களும் உழைக்கும் மக்கள் இயக்கம், த.ஒ.வி.இ. மற்றும் பிற இயக்கத்தினரும் இறுதிநிகழ்வில் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர். அவருக்கு உழைக்கும் மக்கள் தமிழகம் தன் வீரவணக்கத்தை செலுத்துகிறது.

படிப்பகம்

www.padippakam.com

பதிவு எண் : தா.நா.செ.(ந) 1317

# சிலையுதிர்க்காலம்

- அசுரன் -

நகருக்குள் நுழைய
இடைவெளி தேடியது
காற்று.

தீப்பூத்த வானத்தில்
கருகிய
மரங்களைப் போல,
கல்லறைத் தோட்டத்தில்
நடப்பட்ட
சிலுவைகளைப் போல
சிலைகள்...சிலைகள்...

சிலைகளின் நெரிசலில்
மூச்சுத் திணறியது
நகரம்.

வாகனங்கள் கக்கிய
புகையை
வாரிச்சுருட்டியது போல
கருத்து நின்ற சிலைகள்
வழிகாட்டியாய்
வாழ்ந்த காலம் போய்
சிலைகளுக்கேத் தேவையாயிற்று
வழிகாட்டி.

சிலைகளையேப்
பார்த்துப் பார்த்துச்
சிலைகளைப் பற்றியே
பேசிப் பேசி
நாடே சிலையாகிப்போனது.

நடமாடும்
மனிதச் சிலைகள்
பேசுகின்றன, பாடுகின்றன,
உண்கின்றன, உறங்குகின்றன
எல்லாம் செய்கின்றன
'மனிதர்களை மாதிரி'
தவிர

சிலைகளின் காட்டில்
தப்பித் திரியும்
மாந்தர்களே வாருங்கள்!

சிலைகளைத் தவி(க)ர்த்து
மாந்தரைச் செதுக்குவோம்
சிலையுதிர்க் காலம் செய்து
மாந்தம் விளைப்போம்!

வீட்டுக்கு ஒரு
மரம் வளர்ப்போம்!
வீதிக்கு
இரண்டு மாந்தர்களை(யாவது)
நடுவோம்!

படிப்பகம்